செ.வெ.எண்.306/2009, நாள்:16.09.2009

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைகள் மறுமணம் திட்டத்திற்கு நிதியுதவி பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

அரசாணை (நிலை) எண்.190, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள்:10.10.2007ன்படி காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு நிதிஒதுக்கீடு பெறப்பட்டு, டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைகள் மறுமணம் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது.இத்திட்டத்தில் பயனடைய தகுதிகள் மற்றும் விண்ணப்பங்களுக்கு அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர்களை அணுகி விபரம் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விபரம் காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலத அலுவலகம், எண்.43, 2வது தெரு, காந்தி நகர், காஞ்சிபுரம் என்ற முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிக்க தேவையான தகுதிகள் 1.விண்ணப்பதாரர் விதவையாக இருக்க வேண்டும். 2. விண்ணப்பதாரரின் வயது 20 முதல் 35க்குள் இருக்க வேண்டும். 3.இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பதாருக்கு ஆண்டு வருமானத்தில் உச்ச வரம்பு ஏதுமில்லை. 4.விண்ணப்பதாரர் திருமணம் செய்து கொள்ளப்போகும் அன்று மணமகளின் முதல் கணவர் இறந்து விட்டதற்கான இறப்புச்சான்று வழங்க வேண்டும், மணமகனின் வயது 40க்குள் இருக்க வேண்டும், மணமகனுக்கு இது முதல் திருமணமாக இருக்க வேண்டும்.

மேற்படி தகுதியானவர்கள் டாக்டர் தர்மாம்பாள் நினைவு மறுமண திட்டத்திற்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்